



பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திருச்சிக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (15.06.2025) திருச்சி விமான நிலையத்தில் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா உள்பட அமைச்சர்கள் , மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# கோவையில் மருத்துவ மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பட்டங்களை வழங்கினார்!

கோவை, ஜுன் 17

கோயம்புத்தூர் மாவட்டம், இ.எஸ்.ஐ. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (15.06.2025) நடைபெற்ற மருத்துவர்களுக்கான பட்டமளிப்பு விழாக்களில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவம் பயின்று தேர்ச்சி பெற்ற 239 மருத்துவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை செயலர் மரு.பி.செந்தில் குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், தேசிய நலவாழ்வு திட்ட இயக்குனர் அருண்தம்புராஜ், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திருமதி.இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இ.எஸ்.ஐ. அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், உதவி ஆட்சியர் பிரசாந்த் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:-**

கோயம்புத்தூர் மாவட்டம், இ.எஸ்.ஐ. மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மற்றும் கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்களில் மருத்துவ மாணவர்களின் பெற்றோர்கள் மிகவும் பெருமையுடன் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியினை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள முதல்வர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இ.எஸ்.ஐ. மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தேவையான வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மருத்துவத்துறையில் மருத்துவர்கள் மிகப்பெரிய சாதனையினை செய்து வருகின்றார்கள். அமெரிக்காவின் புகழ் பெற்ற மருத்துவ சங்கம் நடத்திய நிகழ்ச்சியில் கடந்த வாரம் கலந்து கொண்டேன்.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து மருத்துவ சங்கங்கள் கலந்துகொண்ட பல்வேறு அமர்வுகள் மூன்று நாட்களாக நடைபெற்றது. அதனை நடத்திய சங்கத் தலைவர் விஸ்வநாதன் என்கின்ற தமிழர் என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அவர் சென்னை மருத்துவ கல்லூரியின் முன்னாள் மாணவர் ஆவார். கலிபோர்னியா யூனிவர்சிட்டியில் குரங்கு அம்மை நோய்க்கு மருந்து கண்டுபிடித்துள்ள மூன்று மருத்துவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். இதுபோன்று ஏராளமானவர்கள் உலக புகழ் பெற்ற மருத்துவர்களாக திகழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களை போன்று இன்றைய தினம் மருத்துவ பட்டம் பெற்ற இளம் மருத்துவர்கள் உலகம் போற்றும் மருத்துவர்களாக சிறந்து விளங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறையில் 22,000க்கு மேற்பட்ட பணியிடங்கள் வெளிப்படைத்தன்மையுடன் நிரப்பட்டுள்ளன. பணியாற்றிவரும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு விரும்பும் இடத்திற்கு பணிமாற்றம் அளிக்கப்பட்டு வருகின்றது.

மருத்துவ பட்டம் பெற்ற மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறை கதவுகள் திறந்து வைத்திருக்கின்றது. மெடிக்கல் போர்டு நடத்துகின்ற தேர்வில் வெற்றிப்பெற்று தமிழ்நாடு அரசின் மருத்துவத் துறையில் சேவையற்ற உங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

### தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் –

# ‘கீழடி - தொடரும் வஞ்சக அரசியல்’ கருத்தரங்கம்!

## கோவை. கு.இராமகிருட்டிணன் – சு.வெங்கடேசன் எம்.பி. – பேராசிரியர் கருணானந்தன் சிறப்புரை!

சென்னை, ஜுன் 17 –

தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ‘கீழடி – தொடரும் வஞ்சக அரசியல்’ எனும் கருத்தரங்கம் சென்னை அன்பகத்தில் நேற்று முன்தினம் (15.6.2025 – ஞாயிறு மாலை 5 மணியளவில்) நடைபெற்றது.

‘கீழடி – தொடரும் வஞ்சக அரசியல்’ எனும் இக்கருத்தரங்கத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை. கு. இராமகிருட்டிணன் தலைமையுரையும், ஜனா விஜய் வரவேற்புரையும் நிகழ்த்த, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், பேராசிரியர் கருணானந்தன், வழக்கறிஞர் வை.இளங்கோவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் இதில் து.இரவிச்சந்திரன், ம.ரே.இராஜ்குமார், வழக்கறிஞர் சரவணன், ஆவடி நாகராசு, மா.கண்ணதாசன், து.வெங்கடேசன், சித்ரா, கிரேசி, வெங்கடேஷ் முன்னிலை வகித்தனர்.

கு.சுரேஷ்குமார் நன்றியுரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சியை, சென்னை மாவட்ட தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஏற்பாடு செய்திருந்தது.


